முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.11.2023) தலைமைச் செயலகத்தில், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஏ.சுப்பிரமணி, துணைத் தலைவர்கள் ஏ. வில்சன் ஆசீர்வாதம், ஆர்.ராம்ஜி, செயலாளர் டி.ரமேஷ்குமார், பொருளாளர் கே.அனந்தகுமார் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் உள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் மறைந்த இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் இரா.அருணகிரி குடும்பத்திற்கு அருணகிரி மகன் அரவிந்த் பெயரில் 10 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்தும், ஒரு லட்சம் காசோலையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சி.ஆனந்தகுமார், பி.எஸ்.சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதும் நமதே என்ற வெற்றியை குறிக்கும் வகையில் பாராளுமன்ற அசோகச்சக்கரம் பொருந்திய வெள்ளிவாளை நினைவுப் பரிசாக நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். அதேபோல் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் திருவள்ளுவர் சிலையை நினைவு பரிசாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சி.ஆனந்தகுமார், பி.எஸ்.சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கூட்டத்தில் சேலத்தில் வரும் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெற உள்ள 2 வது இளைஞர் அணி மாநாட்டிற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் ரூ. 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சி.ஆனந்தகுமார், பி.எஸ்.சீனிவாசன், நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், ரா.கலைவாணன், எம். ரமேஷ்குமார், இரா.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் வெள்ளி செங்கோல் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சி.ஆனந்தகுமார், பி.எஸ்.சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், ரா.கலைவாணன், எம்.ரமேஷ்குமார், இரா.பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் திருவள்ளுவர் சிலை நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சி.ஆனந்தகுமார், பி.எஸ்.சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, துணை அமைப்பாளர்கள் ஜி.ஜெகதீசன், பா.நவலடி ராஜா, டி.சுந்தர், கதிரவன் சேகர், க.முரளி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் நாமக்கல் – சேலம் சாலையில் உள்ள பொம்மைகுட்டைமேட்டில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் கே.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சி.ஆனந்தகுமார், பி.எஸ். சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் சி.விஸ்வநாத், ஆர்.பாலாஜி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு - மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

மாவட்டச் செயலாளர்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி - எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை !

நாமக்கல், நவ. 24- நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்திற்காக ஈரோட்டில் இருந்து கார் மூலம் நாமக்கல் வந்தார். அப்போது, நாமக்கல் மேற்கு மாவட்ட எல்லையில் திருச்செங்கோடு பால் மடை பகுதியில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில், திருச்செங்கோடு ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல், மாநில மகளிர் வலைதளப் பொறுப்பாளர் திருநங்கை அ.ரியா ஆகியோர் முன்னிலையில் 3000 க்கும் மேற்பட்ட மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் பெண்கள் வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த 60 அடி உயர கம்பத்தில் கழக இரு வண்ணக்கொடி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து திருச்செங்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் திருச்செங்கோடு நகரக் கழகம் சார்பில் நகர செயலாளர் தா.கார்த்திகேயன், ஒன்றியச் செயலாளர் கே.பழனிவேல் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சேவையை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சேவையை துவக்கி வைத்தார்.

இதையடுத்து புதுச்சத்திரம் ஒன்றியம் கருங்கல்பாளையத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு புதுச்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.பி.கௌதம் மற்றும் புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஆர். ஜெயபிரகாஷ் ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து பொம்மைக் குட்டை மேட்டில் இளைஞர் அணி 2 வது மாநில மாநாட்டிற்கான நாமக்கல் கிழக்கு - மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநிலங்களவை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் தலைமை தாங்கினர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம், கு.பொன்னுசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் சி.ஆனந்தகுமார், பி.எஸ்.சீனிவாசன், கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஆர்.பாலாஜி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

அப்போது அவருக்கு, தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெண் சீருடையில் கலந்து கொண்டு நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

இச்செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறும் திடலுக்கு மறைந்த மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.அருணகிரி அவர்களின் பெயர் சூட்டி அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட கொடிக் கம்பத்தில் கொடி ஏற்றி வைத்தார். கூட்டம் நடைபெறும் நுழைவாயிலுக்கு மறைந்த மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.உதயகுமார், மறைந்த வெண்ணந்தூர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.சுந்தரம் ஆகியோரது பெயரும், கூட்ட மேடைக்கு மறைந்த நாமக்கல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணன், மறைந்த நாமகிரிப்பேட்டை பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். மோதில்ராஜ், மறைந்த காளப்பநாயக்கன்பட்டி பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.மணிவேல் ஆகியோரது நினைவாக அவர்களின் பெயரும் சூட்டப்பட்டது.

நாமக்கல் மாவட்டத்தில் மறைந்த இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் இரா.அருணகிரி குடும்பத்திற்கு அருணகிரி மகன் அரவிந்த் பெயரில் 10 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்தும், ஒரு லட்சம் காசோலையும் மற்றும் மறைந்த மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என். உதயகுமார் மனைவி ப.குணவதிக்கும், மறைந்த வெண்ணந்தூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.சுந்தரம் மனைவி கவிதாவுக்கும், மறைந்த நாமக்கல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணன் மனைவி கோகிலாவுக்கும், மறைந்த நாமகிரிப்பேட்டை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.மோதிராஜ் மனைவி சத்யாவுக்கும், மறைந்த காளப்பநாயக்கன்பட்டி பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.மணிவேல் மனைவி சரண்யாவுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் காசோலையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதும் நமதே என்ற வெற்றியை குறிக்கும் வகையில் பாராளுமன்ற அசோகச்சக்கரம் பொருந்திய வெள்ளிவாளை நினைவு பரிசாக நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார். அதேபோல் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் திருவள்ளுவர் சிலையை நினைவு பரிசாக வழங்கினார்.

கூட்டத்தில் சேலத்தில் வரும் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெற உள்ள 2 வது இளைஞர் அணி மாநாட்டிற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் ரூ.10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ. இளம்பரிதி, எம்.கார்த்திக், ரா.கலைவாணன், எம். ரமேஷ்குமார், இரா.பிரபாகரன், நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி.ஜெகதீசன், பா.நவலடி ராஜா, டி.சுந்தர், கதிரவன் சேகர், க.முரளி,

மாநில நிர்வாகிகள் கே. எஸ்.மூர்த்தி, பார்.இளங்கோவன், ஜே.கே.எஸ். மாணிக்கம், நாமக்கல் ப. ராணி, திருநங்கை அ.ரியா, முத்துவேல் இராமசுவாமி, ராஜேஷ் கண்ணா, நாமக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் சி.மணி மாறன், மாவட்ட துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, கே.செல்வம், வி.பி.ராணி, பொருளாளர் ஏ.கே.பால சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மரு. இரா.மாயவன் பொதுக் குழு உறுப்பினர்கள் , சசிதரன், விமலா சிவக்குமார், சரவணன், கண்ணன், பூவராகவன், காளியப்பன், குணசேகரன், நகர கழகச் செயலாளர்கள் ராணா ஆனந்த், எஸ்.பூபதி, அ.சிவக்குமார், என்.ஆர். சங்கர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பி. இராமசுவாமி, அ.அசோக் குமார், வி.பி.பழனிவேல், பி.பால சுப்ரமணியம், பெ.நவலடி. எம்.பி.கௌதம், ஆர். ஜெயப்பிரகாஷ், எஸ். செந்தில் முருகன்,

பேரூர் கழகச் செயலாளர்கள் பொன். நல்லதம்பி, ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ், பி. ஜெயக்குமார், என்.செல்வராஜ், என்.தனபால், சி. செல்ல வேல், முருகேசன், கே.அன்பழகன், பழனியாண்டி, மாவட்ட நாமக்கல் மேற்கு மாவட்ட துணை செயலாளர்கள் மயில்சாமி, சாந்தி, அன்பழகன், பொருளாளர் ராஜாராம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஒ.ஆர். செல்வராஜ். டி.ரங்கசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் அ.ரவிச் சந்திரன், திருநாவுக்கரசு (எ) எஸ்.ஆர்.பழனியப்பன், பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், ஆர்.வேலுமணி, எம்.இந்திராணி மயில்சாமி, நகர கழகச் செயலாளர்கள்தா.கார்த்திகேயன், அ.குமார், ஞானசேகரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், கே.செல்வராசு, கு.பழனிவேல். பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், எம்.தங்கவேல், ஏ.பி. ஆர்.சண்முகம், என்.நாச்சிமுத்து, ஆர்.செல்வம், ஆ.இளங்கோவன், பேரூர் கழகச் செயலாளர்கள் மு.திருமலை, ஆர்.கருணாநிதி, எம்.ரமேஷ்பாபு, பி.முருகன், எம்.ராமலிங்கம், பி.முருகவேல், எஸ்.ராமமூர்த்தி, எஸ்.பி.கார்த்திக் ராஜ்,

நகர் மன்றத் தலைவர்கள் து.கலாநிதி, டி.விஜய் கண்ணன், எம்.செல்வராஜ், துணைத் தலைவர் கோ. வெங்கடேசன் மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தை அடுத்து சேலம் செல்லும் வழியில், இராசிபுரம் நகரம், இராசிபுரம் ஒன்றியக் கழகம் சார்பில் அமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நகர செயலாளர் என்.ஆர். சங்கர் ஒன்றியம் செயலாளர், கே.பி.ஜெகநாதன் ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.